## விளக்கமளிக்கும் கலந்துரையாடல்

இவ்வகையான கலந்துரையாடல், பயிற்சிபெற்றவல்லுனர்கள், சமய தலைவர்கள் மற்றும் இறையியலாளர்கள், உள்ளடக்கியிருக்கும் பல சமய நால்கள், நம்பிக்கைகள், இறையியல், கதைகள், புராணம் மற்றும் பல்வேறு சமய பாரம்பரியத்தினர் கற்கும் நோக்கமுடையது. வல்லுனர்கள் ஒத்துப்போகக்கூடய அல்லது வேறுப்பட்ட கருத்துக்களை ஆழந்து உரையாடி முடிவெடுக்கவகைசெய்யும். ஒவ்வொரு சமயத்தவரும் மற்ற சமயத்தைப்பற்றிய திடமான கருத்துகள் அல்லது முறையாக தெரியாத கருத்துக்களை தெளிவு படுத்தும். இவ்வகை கலந்துரையாடலின் இறுதியில், பொதுவாக தங்கள் கொள்கைகள், மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்றும் வெளியிடப்படும். மாநாடு மையங்கள், கூட்ட அறைகளில் கலந்துரையாடப்பட்ட கருத்துக்கள் அனைத்தும், சாதாரண சமய நம்பிக்கையாளர்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். விளக்கமளிக்கும் கலந்துரையாடல் சந்தேகமின்றி தன்னகத்தே ஒரு நிலையையும் செயலினையும் கொண்டள்ளதென்றாலும், இது மட்டுமே , அனைத்து சமய கலந்துரையாடும் முறையாகாது.

## சய அனுபவ கலந்துரையாடல்

இது ஆன்மீக கலந்துரையாடல் என பொருள்படும். ஆன்மீக கோனத்தில் உரையாடல் நடைபெறும். நாம் செபிக்கும் முறை, செபத்தின் காரணம், இறைவன் எனக்கு யார்? ஆன்மீகத்தில் நான் வாழ்வதற்கு என்னை ஊக்குவிப்பது என்ன? என்பன ஆலோசிக்கப்படும் சில கேள்விகளாகும். நம்முடைய திருயாத்திரை அனுபவங்கள், ஆன்மீக தெளிவு, சமய நோக்கு அல்லது செப கருவிகள் பற்றிய கலந்துரையாடலும் உள்ளடங்கும். இவை ஒருவரின் நம்பிக்கையை அடிப்படையில் தொடுவதால் அதிக நம்பிக்கையும் மரியாதையும் தேவைப்படும், பகிரப்படும் கருத்துக்களை எவ்வகையிலும் ஏளனமாகவோ, சிறுமைப்படுத்தியோ பேசப்படாது என்ற பூரண நம்பிக்கையுடனே பகிரப்படுகின்றன. பெரும்பாலும் சமய செபங்களில் ஆழமாக ஈடுபடுபவர்கள் இக்கலந்துரையாடலில் பங்கேற்பர். ஆண், பெண், துறவிகள், அர்ப்பண வாழ்வடைவார்கள், முக்கியமானவர்களானாலும், இறையியல் தெளிவில்லாதவர்கள் கலந்து பயன் பெறலாம்.

## செயல்படும் கலந்துரையாடல்

சமயவாதிகள், பொதுவான தேவைகளை பற்றி கவனம் செலுத்தும் போது இவ்வகை கலந்துரையாடல் இடம் பெறும் எயிட்ஸ் ( AIDS ) உலகமயமாக்கும். நுகர்வு கலாச்சாரம், போதை பொருள் அடிமை, குண்டர்கும்பல், கல்வியறிவு இன்மை மனிதர்களை தவராக பயன்படுத்துதல், இயற்கைகளை பாழ்படுத்துதல் ஆகியவைகள் இக்கலந்துரையாடலில் இடம்பெரும். பிரச்சனைகளை, பல்வேறு சமய பாரம்பரியத்திற்கான நம்பிக்கையாளர்கள், சமுக பொது நலனுக்கு செயல்பட உதவும் வேளையில், சமயங்களை சீரழிக்கும் பொது தீமைகளையும் கண்டுணர செய்கிறது ஆகவே சமய அமைப்புகள் தத்தம் சமயங்களுக்கு மட்டும் சேவை செய்வதை விட பொதுவாக மக்களினத்திற்கே சேவை புரிபவர்காளாகின்றன. சமுக சேவையாளர்கள் சமுக அமைப்புகள், மனித உரிமைகளை மேல்நோக்கும் அரசுசார்பற்ற அமைப்புகள், இக்கலந்துரையாடலில் முன்னிலை வகிப்பார். ✢

INTERNAL CIRCULATION ONLY

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

19 நவம்பர் 2017
பொது காலம்
33ம் ஞாயிறு

# கலந்துரையாடலில் ஈடுப்படவேண்டியவர் யார்





**மினவுதல் மாதா தேவாலயம்**
85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**
*2017 நவம்பர் (கார்த்திகை) மாதத்தின் கருப்பொருள்:*
*வேறுபட்ட கலாச்சாரங்கள் மற்றும் சமயங்களை ஈடுபடுத்துதல்*
***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***
***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** **பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 33ஆம் ஞாயிறு சனி 18-11-2017 ஞாயிறு 26-11-2017**
நீ.மொ 31: 10-13, 19-20, 30-31 தி.பா 127: 1-2, 3, 4-5 1 தெச 5: 1-6 மத் 25: 14-30 (அல்லது 14-15, 19-21)
**ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழியில் நடப்போர் பேறுபெற்றோர் ! ( தி.பா 127 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 18 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பசில்) | **மாலை 7.30 மணிக்கு அனைத்து மறைக்கல்வி மாணவர்களின் கலாச்சார நிகழ்வு நடைபெறும்** |
| ஞாயிறு | 19 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) ( பு. மத்தியாஸ் )<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. அம்புரோஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 20 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 21 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 22 | 6.45 கா | திருப்பலி | **மாலை 7.45 மணிக்கு அதிச ஒருங்கிணைப்பாளர் குழு ஒன்றுகூடல் (BECCOT)** |
| வியா | 23 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 24 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) – திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம் - மாஜெரி* |

**இயேசு கிறிஸ்து - அனைத்துலக அரசர் பெருவிழா : ( ஆண்டு ஒன்று)**
எசே 34: 11-12, 15-17 தி.பா 22: 1-2a, 2b-3, 5-6 1 கொரி 15: 20-26, 28 மத் 25: 31-46
**ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை ! ( தி.பா 22 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 25 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பசில்) | **காலை 9.00 மணிக்கு புதுநன்மை மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும்** |
| ஞாயிறு | 26 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (பு. லூர்து அன்னை சாகா)<br>திருப்பலி (ஆங்கிலம்) (திருவழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ)<br>மாலை 7.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறமாட்டாது, மீண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் )<br>**புதுநன்மை அருளடையாளம் ஒவ்வொரு மொழி வாரியான திருப்பலிகளிலும் வழங்கப்படும்** |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 நவம்பர் (கார்த்திகை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**1. ஆலய காணிக்கை**
- **i.** 11/12 நவம்பர் ரிம: **9,160.85** தித்தி ரி.ம 98.00
- **ii.** இயற்கை பேரழிவு நிவாரண நிதி ரி.ம. 7,756.40

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2. திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு:**
- **i.** திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (ஆ) : ரி.ம 6.00
- **ii.** **வின்சென்ட் டி போல்**
  வின்சென்ட் டி போல் நாட்காட்டி 2018 : ரி.ம 12.00
  கிறிஸ்துமஸ் அட்டை (ஒரு பைக்கட்டினுள் 6) ரி.ம 7.00
  தொடர்ப: வின்சென்ட டி போல் உறுப்பினா மற்றும் டொரீன்

**3.** கத்தோலிக்க சிறைச்சாலைப் பணிக்குழுவினரின் செயல்திட்டம்: (கோலாலம்பூர் மாமறைமாவட்டம்) சிறையில் உள்ள சகோதர சகோதரிகளுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை எழுத உங்களை அழைக்கின்றது. கூடுதல் விவரங்களுக்கு கையேடுகள்/விளம்பரங்களை அறிக்கைப் பலகையில் கண்டு தெரிந்துகொள்ளவும்.

- **நீங்கள் உங்கள் அடிப்படை திருச்சபை சமூகத்தைச் சேர்ந்தவரா? (அதிச)** நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள அதிச வோடு நீங்கள் பதிந்துகொள்ளுங்கள். அதிச என்பது அனைத்து மொழிகளையும் உள்ளடக்கிய ஒரு குடும்பம் - ஒரு சமூகம் . இதைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். அல்லது திரு ஜோன் மெய்னார்ட் அவர்களை தொடர்புகொள்ளுங்கள் ( 016-665 6411 / 016-5033903)
- **புதன் கிழமை அ.தி.ச நாள்** எந்தவொரு ஒன்றுகூடல்களோ, செயற்பாடுகளோ இந்நாளில் செயற்படுத்த வேண்டாம்.
- **பொறுப்புணர்வோடு நடந்துகொள்வோம்** : ஆலய வளாகத்திலுள்ள வகுப்பறைகளில், வகுப்புகள் மற்றும் கூட்டங்கள் முடிந்தபின், மின்விளக்குகள், மின்விசிறி, குளிர்சாதனக் கருவிகள் போன்றவற்றை பயன்படுத்திய பின்னர் அணைத்துவிடவும். மேசை மற்றும் நாற்காலிகளைப் பயன்படுத்திய பின்னர் எடுத்த இடத்தில் மீண்டும் வைத்துவிடவும். எப்போதும் பயன்படுத்திய இடத்தை தூய்மையாக வைக்கும்படி நினைவுறுத்தப் படுகின்றீர்கள்
- **உலக ஏழைகள் தினம் : "அன்பு சொல்லில் அல்ல, செயலில் விளங்க வேண்டும் - 2017" :** 19-11-2017 (ஞாயிறு) ஆலய வளாகத்தில் உள்ள உணவுவிடுதியில் உணவு வழங்கப்படும். நேரம்: மதியம் 2.30 மணி

- **2017 ஆம் ஆண்டின் திருவருகைக்காலத்தில் நம்மை நாமே ஒப்புரவாகிக்கொள்வோம்.**

| | | |
|---|---|---|
| நவம்பர் 27 (திங்கள்) | மாலை 7.30 | : பாத்திமா அன்னை ஆலயம், பிரிக்பீல்ட்ஸ் |
| நவம்பர் 28 (செவ்வாய்) | மாலை 7.00 | : இரக்கத்தின் ஆண்டவர் ஆலயம், ஷா ஆலம். |
| நவம்பர் 29 (புதன்) | மாலை 8.00 | : விண்ணேற்பு மாதா ஆலயம், பெட்டாலிங் ஜெயா |
| நவம்பர் 30 (வியாழன்) | இரவு 8.00 | : செபமாலை அன்னை ஆலயம், கோலாலம்பூர் |
| | இரவு 8.00 | : குவாடலுப்பே அன்னை ஆலயம், பூச்சோங் |
| டிசம்பர் 4 (திங்கள்) | மாலை 7.30 | : அமல உற்பவ அன்னை ஆலயம், போர்ட்டிக்சன் |
| டிசம்பர் 5 (செவ்வாய்) | மாலை 6.45 | : புனித அந்தோணியார் ஆலயம், கோலாலம்பூர் |
| | இரவு 8.00 | : கிறிஸ்து ஒளி ஆலயம், டேசாஜெயா |
| | இரவு 8.00 | : கெமென்சே |
| டிசம்பர் 6 (புதன்) | மாலை 7.30 | : புனித தாமஸ் மூர், |
| | மாலை 7.30 | : புனித கிறிஸ்டோபர் ஆலயம், கெமாஸ் |

- **பங்கின் பராமரிப்புக்கு நிதியுதவி எதிர்பார்க்கிறோம்:** பங்கு அளவில் செய்யப்படும் அனைத்து பராமரிப்பு செலவுகளுக்கும் உங்கள் நிதியுதவிகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் நன்கொடைகளை பணமாகவோ காசோலையாகவோ செலுத்தலாம். காசோலைகளை Church of Visitation என்று எழுதி ஆலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்
  **குறிப்பு:** நன்கொடை வழங்குவோர் நீங்கள் வழங்கும் தொகைக்கு வரி விலக்குப் பெற பங்கு அலுவலகத்தை நாடவும்.
- **கழிவறைகளின் தூய்மையும் பராமரிப்பும் :** பயன்படுத்தியபின் அனைத்து கழிப்பறைகளையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். பயன்படுத்திய பின்னர் கழிப்பறைக் கிண்ணம் சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும். எல்லா இடங்களிலும் குப்பை, திசு, காகிதங்கள் போடுவதை தவிர்க்கவும். நீரைப் பாவித்தவுடன் நீர்க்குழாய் அடைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்வதன் மூலம் நீர் விரயமாவதைத் தடுக்கமுடியும். நன்றி
- **ஆலயத்தை சுத்தப்படுத்துதல்** : ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை 8.00 – காலை 10.00 மணி வரை. ஆண்டவருடைய இல்லத்தை வாராந்தம் சுத்தப்படுத்துவதற்கு உதவிசெய்ய ஆர்வமுள்ளவர்களை வரவேற்கிறோம்.
- **தமிழ் மறைக்கல்வி** வகுப்புகளில் பயிற்றுவிக்க மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் சூசை செல்வநாதன் அவர்களை தெடர்பு கொள்ளவும். 012 903 6581

- டிசம்பர் 2 & 3: புனித பவுல் அடிகளாரின் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகள் புத்தக விற்பனை செய்வார்கள் உங்கள் ஆதரவைத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- டிசம்பர் 2 & 3 : அருட்சகோதரி பெர்த்தா மற்றும் பெண்கள் குழுவினர் வசதி குறைந்த பெண்கள் குழந்தைகளின் நலனுக்காக, தாமான் பிரிமா என்னும் மலிவு விலை அடுக்குமாடி வீட்டில் பெண்களே குழுவாக இணைந்து இந்தப் பலகாரங்களை செய்து விற்பனை செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பலகாரங்களை விற்பனை செய்ய வருகிறார்கள். வாங்கி ஆதரவு தருமாறு கேட்டுகொள்கிறோம்.
- டிசம்பர் 9 (சனி) சோய்ஸ் (ஆங்கிலம்) 100 வாரங்கள் நிறைவு மற்றும் மலேசிய சோய்ஸ் 36 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நன்றி கொண்டாட்டம்: புனித இஃனேசியஸ் ஆலயம், பெட்டாலிங் ஜெயா (தொடர்புக்கு: டோரீன்: 016-3612146 / கிரேஸ் 012 350 3817)